**O.S.No.219/2017**

**PW1 :** சண்முகம் தேதி 24.02.2026

வாசா 1 சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு, 4 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

என் அப்பாவின் தாத்தா பெயர் சேமலைகவுண்டர். அவருக்கு சின்னசாமி கவுண்டர் மாரப்பகவுண்டர் மற்றும் நல்லம்மாள் ஆகியோர் வாரிசுகள். தாவா சொத்துகள் பூர்வீக சொத்துகள். சேமலைகவுண்டர் இறந்த பின்னிட்டு அவருடைய வாரிசுகள் மேலே சொன்ன 3 வருக்கும் சொத்துகள் பாத்தியம் என்றால் சரிதான். சின்னசாமி கவுண்டரின் வாரிசுகள் தான் 4 முதல் 7 பிரதிவாதிகள் என்றால் சரிதான். நான் மாரப்பகவுண்டரின் மகனான இறந்துபோன வேலுச்சாமியின் வாரிசு. 1 மற்றும் 2 வாதிகள் என் தாயார் மற்றும் சகோதரி. நல்லம்மாளுக்கு சோமசுந்தரம் சரோஜா பரமசிவம் ஆகியோர் வாரிசுகள். இவ்வழக்கு நிலுவையில் இருக்கும் போது நல்லம்மாள் இறந்து விடடார். சோமசுந்தரம் நல்லமாளுக்கு முன்பே இறந்துவிட்டார். சோமசுந்தரத்தின் மனைவி 10 ம் பிரதிவாதி 11 12 பிரதிவாதிகள் அவருடைய மகள்கள். நல்லம்மாளின் மற்றொரு மகன் 14 ம் பிரதிவாதி மகள் சரோஜா 13 ம் பிரதிவாதி.

( வழக்கறிஞர் கேட்டுகொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை நிறுத்தி வைக்கப்படுகிறது)